# சாட்சிய வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)
முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்
அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–11வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமசாமி | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | சுப்புராயமுதலியார் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்சமயம் வேளாண்நகர் ஈரோட்டில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு வீரப்பசத்திரத்தில் வசித்துவந்தேன். கடந்த 25.07.2014 அன்று நசியனூர் கோவிலுக்கு என் நண்பர் செல்வராஜ்வுடன் இருசக்கர வாகனத்தில் ஈரோடு வடக்கு காவல் நிலையம் அருகில் வரும்போது வடக்கு காவல் நிலைய போலீசார் என்னையும், செல்வராஜ்யையும் இரவு 8.30 மணி அளவில் அழைத்தார்.
2. அதன்பிறகு இருசக்கர வாகனத்தை செல்வராஜ் நிறுத்திவிட்டு நானும், செல்வராஜ்ம் காவல் நிலையத்திற்கு சென்றோம் அங்கு 1ம் எதிரியான சிவராமகிருஷ்ணனை கைது செய்து அழைத்து வந்து இருப்பதாகவும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் தருவதாகவும் கூறியதின் பெயரில் காவல் ஆய்வாளர் என்னையும், செல்வராஜ்யையும் சாட்சிகளாக இருக்கும் படி கேட்டுக்கொண்டார்.
3. மேலும் 1ம் எதிரியான சிவராமகிருஷ்ணன் வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை அங்கு இருந்த போலீசார் மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்தார். அருண்ராம் என்பவர் 1ம் எதிரியின் மகளை காதலித்து வந்ததாகவும் 1மற்றும் 2 எதிரிகள் தங்களுடைய மகளுக்கு வேறு ஒரு

இடத்தில் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டதால் அதன் காரணமாக அருண்ராம் தற்கொலை செய்து கொண்டார் என்பதை 1ம் எதிரி வாக்குமூலத்தை என் முன்பும், செல்வராஜ் முன்பும் பதிவு செய்யப்பட்டது.

4. மேற்படி பதிவு செய்த வாக்குமூலத்தில் உள்ள முதல் கையழுத்து என்னுடையது தான். மேலும் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். என்னுடன் செல்வராஜ்ம் மேற்கண்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டார். மேலும் 1ம் எதிரி சிவராமகிருஷ்ணன் தான் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுத்துவிட்டார்.

5. மேற்கண்ட காரணமான எதிரி கையொப்பமிட மறுத்துவிட்டார் என்பதால் நானும், செல்வராஜ்ம் மீண்டும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டோம். மேலும் காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலத்தில் என் முன்பும், செல்வராஜ் முன்பும் கையொப்பமிட்டார். போலீசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.